www.newwisdomministries.com

# ஞானஒலி





## ஒரே மீட்ர் இயேசு கிறிஸ்து

ஞானம் 6 - ஒலி 50 - 24.12.2023

# இணையில்லா இயேசு






**தலையங்கம்**

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி


இயேசு கிறிஸ்துவில் பிரியமான எனதருமை சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் என் அன்பான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2023ம் ஆண்டின் இறுதி நாட்களில் நாம் இருக்கின்றோம். 2024 வது புத்தாண்டை ஏராளமான நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். கடந்த ஆண்டைப்பற்றி பலர் மிகுந்த நன்றியோடு நினைப்பார்கள். பெரும்பாலோர், பெருத்த ஏமாற்றத்தோடும், கொஞ்ச நன்றி உணர்வோடும் இருப்போம். புத்தாண்டு இன்னும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும், நம்பிக்கையும், மனநிறைவு தருகின்ற ஆண்டாகவும் இருக்க வேண்டும் என்று காத்திருப்போம். அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாதவரை, மனித மனம், ஆர்வம் குறையாமல், நம்பிக்கையோடும் நடைபோடும். அடுத்தடுத்து என்னென்ன நடக்கும் என்று தெரிந்துவிட்டால், உப்புசப்பு இல்லாததாக வாழ்வு மாறிவிடும். அங்குதான் இறைவனைத் தேடும் மனநிலை மனிதனுக்கு வரும். நினைப்பதெல்லாம் நடந்தால், இறைவன் இல்லை, தன்முயற்சி இல்லை, தான் செய்தது, தனது வெற்றி என்று எதுவுமே இருக்காது. இந்த பதற்றம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.

எல்லாவற்றையும் கற்றுக்கொடுப்பவர் நல்ல ஆசிரியரல்ல, மாறாக சிந்திக்கக் கற்றுத் தருவதும், தன்முயற்சியை ஊக்குவிப்பதே கல்வியின் முக்கியப்பணி. வகுப்பில் கற்றுக் கொடுத்ததை, தன் சிந்தனையில் கற்று அதைப் புதிய பரிமாணத்தோடு புதிய பரிமாணமாக அற்புதாக அதை நடைமுறைப்படுத்தும் மாணவமே ஆகச்சிறந்த கல்வியின் பயன். அப்படிப்பட்டவர்களின் வாழ்வு யாரும் எதிர்பாராத வகையில் புதுப் பரிணாமமாக இருக்கும். ஒருவரைத் தன் சுயத்தை அறியச் செய்து, அந்த சுயத்தின் முழு ஆற்றலின் புத்தெழுச்சியை வெளிக்கொணரும்போதுதான் இந்த பிரபஞ்சம் புதுப்பொலிவு பெறுகின்றது. அது புதுவாழ்வாக மாறுகின்றது.

பூவுலகமும், புதுப்பொலிவும், புதிய மாற்றமும் பெறுகின்றது. அது உலகமெங்கும் இடைவிடாது நடந்துகொண்டேயிருக்கின்றது.

அதன் உச்சபச்ச நிகழ்வாகத்தான் இறைமகன், மனுமகன் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு அமைந்துள்ளது. இயேசுவின் பிறப்பிலேதான், பிரபஞ்சம் தூக்கத்திலிருந்தும், இயலாமையிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும், அறியாமையிலிருந்தும் எழுந்து நின்றது. ஒவ்வாரு குழந்தை பிறக்கின்றபோது, குடும்பத்தில் மகிழ்ச்சியும், சமாதானமும் பீறிட்டு எழும், எங்கும் ஆனந்தம் பிறக்கும். குழந்தையைப் பார்க்கும்போது, அனைவரும் தங்கள் குழந்தைப் பருவத்தை மீண்டும் கொண்டாடும் பேரானந்தத்தைப் பெற்று மகிழ்ச்சியடைகின்றார்கள். கொஞ்சிக் குழாவுகிறார்கள். அந்த சந்தோஷம் ஒரு குறிப்பிட்ட குடும்ப உறவுகளுக்குள் மட்டுமே நடக்கும் நிகழ்வு. ஆனால் இயேசுவின் பிறப்பு பேரண்டத்திற்கே மாபெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தியாக மலர்ந்தது. அதைத்தான் வானதூதர்கள், அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும், பெரும் மகிழ்ச்சியூட்டும், நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். (லூக்கா 2/10) என்று அறிவித்தார்கள்.

இயேசுவின் பிறப்பு, கேட்கின்ற அனைவருக்கும், அதை கேட்காத எல்லோருக்கும் மாபெரும் மகிழ்ச்சி தரும் செய்தியாக உள்ளதுதான் அதிலுள்ள மாபெரும் ரகசியம்.

மேலும், 1 கொரிந்தியர் 1ம் அதிகாரம் 3ம் இறைவசனத்தின் இறுதியில், இயேசு கிறிஸ்து நமக்குமட்டும் அல்ல அனைவருக்கும் ஆண்டவர்...என்று கூறுகின்றது. இயேசு யூதர்களுக்கு மட்டும் உரிமையானவர் இல்லை, மாறாக உயிர்கொண்ட அனைத்தும் அவரால், அவர் வழியாக படைக்கப்பட்ட அனைவருக்கும் உரிமையானவர். படைக்கப்பட்ட அனைத்தும் கல், மண் முதல், அனைத்து உயிர்களும் அவருக்கு கட்டுப்பட்டதே....

கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவை உலகம் முழுவதும் ஒரு மாதம், இரண்டு மாதங்களாகக் கொண்டாடுகின்றது. இந்தியாவில், கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்பு மனநிலையை ஊதி ஊதிப் பெரிதாக்கினாலும், கிறஸ்துமஸ் நாளன்று, பிறமதத்தைச் சேர்ந்தவர்கள் முக்கியமாக, இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக கல்தோலிக்க ஆலயத்திற்கு வந்து குடிலில் உள்ள குழந்தை இயேசுவை வணங்கி ஆராதித்துச் செபிக்கின்றனர். அன்று மூன்று ஞானிகள் வந்ததுபோல், இன்றும் இயேசுவின் மகிமையை அறிந்த புதுப்புது ஞானமுள்ள மக்கள் இன்றும் வந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். ஏனென்றால், மேலே கூறியதுபோல், இயேசு கிறிஸ்து நமக்கு மட்டுமல்ல, அவர் அனைவருக்கும் ஆண்டவர்...இந்தியாவும் அவரது ஆளுகைக்கு உட்பட்டதுதான். அது விரைவில் நிரூபணமாகத்தான் போகின்றது. அது ஆண்டவரின் செயல், நம் கண்ணுக்கு வியப்பாகத்தான் இருக்கப்போகின்றது.


ஒருகாலத்தில், இயேசுவின் மார்க்கத்தை அழிக்க நினைத்தவர்கள் எல்லாம் அதன்பிறகு, இயேசுவின் நற்செய்தியாளர்களாக மாறியதுதான் வரலாறு. அதன் முதல் அடையாளமாகத்தான் புனித.பவுலடியார் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளார்.

இன்று இயேசுவையும், அவரின் மார்க்கத்தை அழிக்க எழுந்துள்ளவர்கள், வருங்காலத்தில், மாறுவார்கள், அதோடு....

இயேசுவே ஆண்டவர், அவர் அனைவருக்கும் ஆண்டவர் என்பதை உணரந்து, அவருக்காக வாழ்வர், இந்தியாவும் விதிவலக்கல்ல........

# விவிலியம் அறிவோம்





## பலவகைச் சட்டங்கள் (தொடர்ச்சி)

இச 22:1-4 வரையுள்ள இறைச்சொற்றொடர்களில் ஒருவர் இழந்த சொத்துக்கள் உரிமையாளருக்குக் கிடைக்கச் செய்வதற்குக் செய்ய வேண்டிய காரியங்கள் குறிப்பிடப்படுகின்றன. இழந்த சொத்துக்கள் கால்நடைகளாகவோ, வேறு பொருள்களாகவோ இருக்கலாம். ஒருவர் இழந்ததாகக் கருதப்படும் கால்நடைகள் அல்லது வேறு பொருள்களைக் கண்டெடுப்பவர் உரிமையாளரிடம் திரும்ப ஒப்படைப்பது ஓர் உயர்ந்த மதிப்பீடு. குறிப்பாக வழிதவறிய கால்நடைகள் அல்லது பொருள்கள் விலைமிகுந்ததாகவோ அல்லது உரிமையாளருக்கு மிகவும் நெருக்கமுடையதாகவோ இருந்தால் அவற்றை அவரிடம் ஒப்படைப்பது மிகவும் போற்றுதற்குரிய சிறந்த செயல். இறைவாக்கினர் நாத்தான் தாவீதிடம் கூறிய உவமையில் வருகின்ற செம்மறிக்குட்டியின் மீது அதன் உரிமையாளர் கொண்டிருக்கும் பாசம் கால்நடைகளுடன் மக்கள் கொண்டிருக்கும் பாசத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஒரு சமூகம் அமைதியானதாக இருக்கவேண்டுமென்றால் அடுத்தவருக்குச் சொந்தமானவற்றை மதிக்கவேண்டும்; அவர்களுக்கு உதவி தேவைப்படும்போது அதைச் செய்யவேண்டும்.

இச 22:5 உடைகள் பற்றிய சட்டமாக உள்ளது. ஆண்களும் பெண்களும் தங்கள் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் விதத்தில் உடைகளை அணிவதுதான் முறையானது; ஏற்கத்தக்கது. அவ்வாறு செய்வது இயற்கையோடும், எல்லா படைப்புகளுடனும் அமைதியுடன் வாழ்வதற்கு வழிவகுக்கிறது. ஆண்களின் உடைகளைப் பெண்கள் அணிவதும் பெண்களின் உடைகளை ஆண்கள் அணிவதும் அன்றைய சமூகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருந்தது. ஆண்டவர் அதை அருவருப்பான செயலாகப் பார்க்கிறார்.

இந்தச் சட்டம் கலாச்சாரத்தில் பின்பற்றப்படவேண்டிய சில எல்லைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவதாக உள்ளது. உதாரணமாக, உணவுப் பழக்கங்கள், உடைகள் ஒரே நூலிலிருந்து நெய்யப்படுதல் போன்றவற்றைக் கூறலாம். பண்டைய காலத்தில் பெண்களின் உடைகளை ஆண்கள் அணிவது நாடகத்திற்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அன்றைய காலத்தில் பெண்கள் நடிப்பது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே பெண்களின் வேடத்தில் ஆண்களே நடித்தார்கள். ஆண்களும் பெண்களும் எப்படிப்பட்ட உடைகளை அணியவேண்டும் என்பதை விவிலியம் எங்கும் குறிப்பிடவில்லை; ஆனால் விவிலியத்தின் சில பகுதிகள் அவர்களின் தரத்தையும், தகுதியையும் அவர்கள் செய்யும் பணியையும் அடையாளமாகக் கொண்டு உடைகள் வரையறுக்கப்பட்டுள்ளதைப் பதிவுசெய்கிறது (தொநூ 38:14; எசாய 3:18-24).

இச 22:6-7 இறைச்சொற்றொடர்கள் பறவைகளின் கூடுகளைப் பற்றிப் பேசுகிறது. இச்சொற்றொடர்களை இயற்கையின் இறையியல் எனக்கூறலாம். இச 20:19-20 இல் பழமரங்கள் வெட்டி அழிக்கப்படுவது தடை செய்யப்படுகிறது; இயற்கை பாதுகாக்கபபட வேண்டும் என்ற உண்மையைத்தான் இந்த வரிகள் கூறுகின்றன. இன்றைய சமூகத்தில் விலங்கினங்கள் மதிக்கப்பட வேண்டும்; அவைகளைக் கொடுமைப்படுத்தலாகாது என்றெல்லாம் பேசப்படுவதைப் பார்க்கிறோம். விலங்கினங்களைப் பாதுகாப்பதற்காகப் பல இயக்கங்களே உள்ளன. இந்தச் சட்டத்தின் நோக்கமெல்லாம் எந்த ஒரு இனமும் அழியக்கூடாது என்பதுதான். குஞ்சுகளையோ அல்லது முட்டைகளையோ எடுத்துவிட்டு தாய்ப் பறவையை விட்டுவிடுவது மீண்டும் அந்தப் பறவை இனப்பெருக்கம் செய்வதற்கு வழிவகுக்கும். பண்டைய காலத்தில் பறவைகள் இனம் பிரித்து பெயரிடப்படவில்லை. பொதுவாக பறவைகள் மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டன. உண்ணத் தகுந்த பறவைகள், பலியிடுவதற்கான பறவைகள் மற்றும் உண்ணத்தகாத பறவைகள். விவிலியத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பறவைகளின் பெயர்கள் உத்தேசமாகக் கொடுக்கப்பட்டவைதான்.

இச 22:8 கட்டடங்கள் எவ்வாறு கட்டப்பட வேண்டும் என்பதைக் கூறுகிறது. குறிப்பாக புது வீடு கட்டும்போது வீட்டுமாடியைச் சுற்றிக் கைப்பிடிச் சுவர் கட்டவேண்டும் எனக் கட்டளையிடப்படுகிறது. ஏனெனில் ஒருவன் மாடியிலிருந்து விழுந்து இறந்தால் விழுந்தவனின் இரத்தப்பழி வீட்டுஉரிமையாளரைச் சேரும். வீட்டுமாடியைச் சுற்றிக் கட்டப்படும் கைப்பிடிச் சுவர் ஒருவர் எதிர்பாரமல் கீழே விழுவதைத் தடுக்கிறது. பண்டைய காலத்தில் ஒரு வீட்டின் மாடிப்பகுதி சமதளமானதாக விடப்பட்டது. அப்பகுதி விருந்தினர்களை உபசரிக்கும் பகுதியாகவும், ஒருசில பணிகளைச் செய்யும் இடமாகவும், சில நேரங்களில் பலிசெலுத்தும் இடமாகவும் மற்றும் துக்கம் சம்பந்தமானச் சடங்குகளை

நடத்தும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டது (யோசுவா 2:6; 1 சாமு 9:25-26; எரேமி 19:13; செப் 1:5). வீட்டின் மாடிப்பகுதி இவ்வாறு பல காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பழக்கம் மேற்காசிய நாடுகளில் இன்றும் பழக்கத்தில் உள்ளது. எனவே வீட்டு மாடிப்பகுதி பலமானதாகக் கட்டப்பட வேண்டும்; மாடியைச் சுற்றிக் கைப்பிடிச் சுவர்கட்டப்பட வேண்டும்.

இச 22:9-11 வித்தியாசமானவைகள் ஒன்றாக கலப்பதை எதிர்க்கிறது. சில கலவைகள் கடவுள் வழிபாட்டிற்காக மட்டுமே செய்யப்பட்டன. உதாரணமாக, நார்ப்பட்டு மற்றும் கைத்தறி உடைகள் உடன்படிக்கைக் கூடாரம் மற்றும் குருக்களின் உடைகளில் பயன்படுத்தப்பட்டன. அன்றாட வாழ்க்கைச் சூழலில் கலத்தல் தடை செய்யப்பட்டது. பலதரப்பட்ட விதைகளைக் கலந்து விதைப்பது, நூல் மற்றும் விலங்குகளின் தோல்களில் செய்யப்பட்ட உடைகளை உடுத்துவது இயற்கைக்கு எதிரான செயலாகப் பார்க்கப்படுகிறது. தொநூ 1 வது அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள படைப்பு பற்றிய பதிவுகள் படைப்பனைத்தும் உருவமற்று வெறுமையாக இருந்த நிலையை மாற்றியமைத்து மண்ணுலகில் ஒரு ஒழுங்கைக் கொண்டுவருவதாகக் காட்டப்படுகிறது. மேலும் படைப்பனைத்தையும் பாதுகாத்து, பராமரிக்கும் பணி மனிதர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. இந்தக் கொள்கைகளின் அடிப்படையில்தான் இத்தகையச் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. ஒன்றையொன்று சேரமுடியாத கூறுகளை ஒன்றிணைப்பது இயற்கையின் இயல்பிற்கு எதிரான ஒன்றாக உள்ளது (காண் லேவி 19:19). சூனியத்திற்கு எதிரான ஒரு வாதமும் இதில் இருப்பதாக நினைக்கிறேன். சூனியம், மாந்திரீகம் போன்றவை பண்டைய மேற்காசிய நாடுகளில் பழக்கத்தில் இருந்தன. சமயச் சடங்குகள் வழியாக இயற்கையைக் கடந்த ஆற்றலை அவை கட்டுக்குள் கொண்டு வந்தன. சில மூலிகைள் மற்றும் மருந்துகளை ஒரு கலவையாகச் செய்து மந்திரங்கள் ஓதுவது ஆற்றல் நிறைந்த சக்தியாகக் கருதப்பட்டது. எனவேதான் இணைச்சட்ட இறையியலில் மாறுபட்ட விவசாயப் பொருள்களை கலப்பது சந்தேகத்துடன் பார்க்கப்பட்டது. யூதமதத்தில் ரபிக்கள் இந்தச் சட்டங்களை ஏற்றுக்கொண்டனர்; அவற்றை விரிவுபடுத்தி, ஒழுங்குபடுத்தி எழுதி வைத்தனர்.

இச 22:12 குஞ்சங்கள்பற்றிப் பேசுகின்றது. ரபிக்களின் யூதமத்தில் குஞ்சங்கள் முக்கிய இடம் வகித்தன. பன்னிரு வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆண்மகனும் தங்கள் உடைகளின் முனைகளில் குஞ்சங்கள் செய்து ஒவ்வொரு குஞ்சத்திலும் ஒரு நீல நாடாவைக் கட்டவேண்டும். இந்தக் குஞ்சங்கள் ஆண்டவருடைய கட்டளைகளை அவர்களுக்கு நினைவூட்டின. இதனால் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாக,அவருடைய கட்டளைகளுக்குப் பிரமாணிக்கம் உள்ளவர்களாக அவர்கள் இருப்பார்கள் (எண் 14:37-41).

பண்டைய மேற்காசிய நாடுகளில் உடைகளில் குஞ்சங்கள் அமைத்து அணிவது ஒருவருடைய தகுதியை அல்லது அவரது பணியைக் குறித்துக் காட்டுவதாகவும் இருந்தது. இஸ்ரயேல் மக்களைப் பொறுத்தவரை இந்தக் குஞ்சங்கள் தங்களைச் சுற்றி வாழ்ந்த வேற்றின மக்களிளிடமிருந்து அவர்களைப் பிரித்துக் காடடுவதற்கும், கடவுள் விரும்புகின்ற பாதையில் அவர்கள் நடப்பதற்கும் உதவி செய்தன.

இச 22:13-29 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் மண ஒப்பந்தம் மற்றும் திருமணம்பற்றிப் பேசுகின்றன. பண்டைய காலத்திய திருமணச் சட்டங்கள் அனைத்தும் சமூகம் ஆணாதிக்கச் சமூகமாக இருந்தது என்பதைக் காட்டுவதாக உள்ளன. திருமணத்திற்குமுன் ஒரு பெண் கன்னியாக இருக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. மணப்பெண் கன்னியாக இருப்பது பிறக்கின்ற குழந்தை உண்மையாகவே ஒருவனுக்குச் சொந்தமானது என்பதை நிரூபிப்பதற்கு அவசியமானதாகக் கருதப்பட்டது. மணப்பெண் கன்னியாக இருக்கிறாள் என்பது அவளது குடும்பத்தின் நற்பெயரை, நம்பகத்தன்மையை வெளிப்படுத்துகின்ற ஒன்றாகவும் இருந்தது. வேற்று சமயங்கள் பாலியல் உறவை வழிபாடுகளாக மாற்றின. கடவுளர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவும், சந்ததியினரைப் பெருக்குவதற்காகவும் அவ்வாறு செயல்பட்டனர். இஸ்ரயேல் மக்கள் நடுவில் அச்செயல்கள் அருவருப்பானவைகளாகப் பார்க்கப்பட்டன. தம்பதியர் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாக இருப்பது முக்கியமானதாகக் கருதப்பட்டது. ஆனால் ஒரு கணவன் தன் மனைவியுடன் சிலகாலம் வாழ்ந்தபின் அவளை விரும்பாமலிருக்கலாம். அவளை மணவிலக்கு செய்வதற்காக அவள் கன்னியல்ல எனக்குற்றம் சாட்டலாம். இந்தச் சூழ்நிலையில் அவள் அவனது மளைவியாக வந்தபோது கன்னியாக இருந்தாள் என்பதை நிரூபிக்க வேண்டும். அன்றைய சமூகத்தில் அதற்குப் பல சோதனைகள் பின்பற்றப்பட்டிருக்கலாம். அந்தப் பெண்ணின் குடும்பத்தினரும் தங்கள் குடும்பத்தின் மீது இழுக்கு படிந்துவிட்டது என்பதற்காக அவள்மீது சுமத்தப்பட்ட குற்றம் அநீதியானது எனவாதம் செய்ய முன்வரலாம். கணவன் அவள்மீது குற்றம்சாட்டுவது தவறு எனத் தெரியவந்தால் அவன் கடுமையாகத் தண்டிக்கப்படுவான். அவன் அதற்காகத் தண்டத்தொகை கட்டவேண்டும். மேலும் அதன்பின் அவளது மனைவியை மணவிலக்கு செய்யமுடியாது. மாறாக,அவன் தனது மனைவியின்மீது சுமத்தியக் குற்றம் சரியானது என்று நிரூபிக்கப்பட்டால் அவள் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும்.


திருமணமான ஒரு மனிதன் இன்னொருவனுடைய மனைவியுடன் கள்ளத் தொடர்பு வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இருவரும் கொல்லப்பட வேண்டும். இந்தச் சட்டம் பத்துக்கட்டளைகளில் உள்ள ஆறாவது கட்டளைக்கு இணையானதாக உள்ளது. விபச்சாரம் பெரிய பாவமாகக்

கருதப்படுவதற்குக் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, விபச்சாரம் ஒருவனின் குடும்பத்தின் மீது தொடுக்கும் தாக்குதலாகப் பார்க்கப்படுகிறது. திருமணமான ஒருவன் தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து, சந்ததிகளைப் பெற்றெடுப்பது உரிமையாகப் பார்க்கப்படுகிறது. விபச்சாரம் இந்த உரிமையை அழிக்கிறது. இரண்டாவது, விபச்சாரம் அதில் ஈடுபடும் இருவரையும் தீட்டானவர்களாக மாற்றுகிறது. எனவே இச்செயல் சமூகத்தையும் சீரழிக்கும் செயலாகவும் பார்க்கப்படுகிறது. விபச்சாரம் நிலத்திலிருந்து மக்கள் விரட்டப்படுவதற்கும் ஒரு காரணமாக அமைகிறது (லேவி 18:24-25).

நகரத்தில் அல்லது வயல்வெளியில் பலவந்தமாக ஒரு பெண்ணுடன் ஒருவன் உடலுறவு கொள்ள முற்பட்டால் அவள் பிறருடைய உதவியைப் பெறுவதற்கு எடுக்கும் முயற்சிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இத்தகையச் சூழ்நிலைகள் பலவீனமான சூழலில் அகப்படும் ஒருபெண் தவறாகச் குற்றம் சுமத்தப்படலாகாது, தண்டனை பெறக்கூடாது என்பதைக் காட்டுவதாக உள்ளன. திருமணமாகாத ஒரு கன்னிப் பெண்ணுடன் பலவந்தமாக உடலுறவு கொண்டால் அவன் தண்டத்தொகைக் கட்டவேண்டும்; அவளை மணம் செய்யவேண்டும். மேலும் அவளை மணவிலக்கு செய்யமுடியாது. மணஒப்பந்தம் மற்றும் திருமணம் சார்ந்த சட்டங்களைப் பார்க்கும்போது திருமணம் ஒரு புனித உறவாக, உடன்படிக்கையாகக் கருதப்படுவதைப் பார்க்க முடிகிறது. பண்டைய மேற்காசிய சமூகத்தில் திருமணம் பொருளாதாரம் மற்றும் சமூகம் சார்ந்த ஒரு முக்கிய நிகழ்வாகவும் பார்க்கப்பட்டது. மணஒப்பந்தம் ஆனவர்கள் மணமானவாகளாகவே கருதப்பட்டார்கள்; எனவே அவர்கள் ஒருவர் ஒருவருக்கு பிரமாணிக்கம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. எனவேதான் விபச்சாரம் பெரிய பாவமாகக் கருதப்படுகிறது.

மீண்டும் சந்திப்போம்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf.





அருட்தந்தை.ஜஸ்டின் சேவியர் ராஜ்.
பங்குத் தந்தை, புனித திருக்குடும்ப ஆலயம், பெருந்துறை, கோவை மறைமாவட்டம்

## திருவருகைக்காலம் 4ம் வாரம் ஞாயிறு - 24.12.2023

2 சாமுவேல் 7/1-5,8-12,14-16, உரோமையர் 16/25-27, லூக்கா 1/26-36

### நிபந்தனையற்ற பதிலுரை

ஒருமுறை ஒரு அமெரிக்க இளம்பெண், பீத்தாவன் இல்லத்தை சந்தித்தார். அவருடைய இல்லத்தில்இருந்த பியானோ இசைக் கருவியைக் கண் மகிழ்ந்து, அருகில் அமர்ந்து அவருடைய தலைசிறந்த இசையைக் கம்பீரமாக வாசித்தார். முந்தவுடன் அங்கிருந்த ஊழியரை பெருமையாக பார்த்து இங்கு பிரபலமானவர்கள் வருவார்கள் அல்லவா? என்று கேட்டார். அவரும் ஆம் என்று சொல்லிவிட்டு இசைத் துறையில் புகழ்வாய்ந் பாத்ரெவெஸ்கி-கூட கடந்த வாரம் வந்தார் என்றார். அவர் பீத்தாவன் பியானோவை இசைத்தாரா? என்று கேட்க, அவர் இல்லை, இதனை மீட்ட நான் தகுதியற்றவன் என்றார் என்று பதில் சொன்னார.

இறையேசுவில் அன்புக்குரியவர்களே, நாம் பல முடிவுகளை எடுக்கின்றோம். அவை நம் வாழ்க்கையை மாற்றுகின்றனவா? என்றால், ஆம் என்றுதான் சொல்லவேண்டும். ஒன்றை மறந்துவிடக்கூடாது. நமது இறந்த காலத்தை நாம் மாற்ற முடியாது. நமது எதிர்காலத்தை நாம் வரையறுக்க முடியாது. இருப்பினும் நமது தீர்மானங்கள் நமது எதிர்காலத்தை சிந்திக்க நமக்கு உறுதுணையாக இருக்கின்றன.

இன்றைய முதல் வாகத்தில் நாம் பார்க்கின்றோம். தாமிது அரசரின் ஆட்சியிலே சமாதானம் நிலவுகிறது. தனக்கும் தன் மக்களுக்கும் நிம்மதியும், சமாதானமும் அருளிய ஆண்டவருக்கு ஒரு கோவில் கட்ட விரும்புகிறார். நாத்தான் என்ற

இறைவாக்கினர் வழியாக இறைவன் தாவீதிடம் பேசுகிறார். தாவீதின் குலத்தில் தோன்றவிருக்கும் மெசியா பற்றி நாத்தான் இறைவாக்குரைக்கிறார். இஸ்ரயேலின் பாதுகாப்பாளரும், மீட்பருமான இறைவன் தங்கிய இடம் கூடாரம். எகிப்திலிருந்து இஸ்ரயேல் மக்களை மீட்ட நாள்முதல், நாட்டைக் கடந்து செல்லும் பயணம் முழுவதும், மக்களோடு தங்கி இருந்த இம் கூடாரம். மக்களிடையே இருந்து அவர்களை நெடிய பயணத்தின்போது வழிநடத்திச் செல்ல ஏற்ற இடம் கூடாரம். மக்களை எளிதில் அணுக, மக்களோடு மக்களாய்ப் பழகத் தகுந்த இடம் கூடாரம். விரைவில் பிரித்துவிட்டுப் பயணம் செல்லும் இடமெல்லாம் மக்களைத் தொடர்ந்து சொல்வது கூடாரம் மக்களோடு கொண்ட நெருங்கிய உறவைச் சுட்டுவது கூடாரம். எனவேதான் இயேசு இவ்வுலகிற்கு வந்து மனினாகப் பிறந்ததை, வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார் என்பார். இது நம்மிடையே தன் கூடாரத்தை அமைத்தார் என்பதுதான் கிரேக்க மூலத்தின் நேர் மொழிபெயர்ப்பு, ஆம் மனிதரோடு நெருக்கமான உறவுகொள்ள ஏற்ற சாதனம் மனிதர்களோடு இணைந்து வாழ்வதே.

கூடாரத்தில் தன்னை உள்ளடக்கி, இஸ்ரயேல் மக்களுடன் தன்இணக்கத்தை உறுதிப்படுத்தி இறைவன், இன்றைய நன்செயதி வாசகத்தில், அன்னை மரியாளின் திருவயிற்றில் தன்னை உள்ளடக்கித் தன் அன்பையும், உடனிருப்பையும் இன்னும் ஆழமாய் தெரியப்படுத்துகிறார். அன்னை மரியாளின் சம்மதம் ஓர் ஆனந்த விடியல். ஒருவீடு வெளிச்சம் பெற வேண்டுமென்றால், ஒரு விளக்கு அழுதுதான் தீரவேண்டும் என்பான் ஒரு கவிஞன். மனித சமுதாயம் ஒளிபெற, வாழ்வு பெற, தன்னைப் பணயம் வைக்கிறார் கன்னி மரியாள்.

கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழாவுக்கு மிகமிக அருகாமையில் இருக்கும் நமக்கு கன்னி மரியாளின் சம்மதம் ஒரு வழித்துணையாக அமைகிறது. எந்தவித அச்சம் இல்லாமல் நம் இறைவன் நம்மைக் காப்பார் என்ற நம்பிக்கையுடன் இறைவனின் திருவுளத்திற்குப் பணிந்து நடந்த கன்னி மரியாளைப்போல, நமது வாழ்க்கையிலும், இறைவனது செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், கன்னி மரியாளைப்போல, நம் இறைவன் நம்மைக் காப்பார் என்ற நம்பிக்கையுடன், இறைச்சித்தத்தை ஏற்று வாழ, இறைவனின் அருள்துணை வேண்டி இத்திருப்பலியில் செபிப்போம். ஆமென்.



# திருவருகை காலம் நான்காம் ஞாயிறு

2சாமு. 7: 1–5, 8–12, 14–16
உரோ. 16: 25–27, லூக். 1: 26–38

**24-12-2023**




பா. சேவியர்
திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

அமைதி என்னும் திருவிளக் கேற்றி, மனம் திருந்தி வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் திருவருகை காலம் நான்காம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

குறையுள்ள இடத்தில் நிறை வைக் காண்கின்ற கடவுள். குறையுள்ள நம்மையும் ஏற்று அவரது சாட்சிகளாய் வாழ அழைக்கிறார். ஆண்டவரின் ஆவியால் நிரப்பப்பட்ட தாமிதைப் போல், இறைவனுக்காகத் தன்னையே மடமையாக்கிக் கொண்ட பவுலடியாரைப்போல் நாமும் இறைத்திட்டத்தில் மீட்பின் கருவியாகச் செயல்பட இன்றைய வழிபாடும் நம்மை அழைக்கிறது.

தந்தையாகிய இறைவன் மனித குலத்தை மீட்டு அவர்களை நல்வழிப்படுத்தவும், புதிய பாதை யில் அவர்களை அழைத்துச் செல்லவும் தனது ஒரே மகனை விடுதலை வேள்வியாக அறிவிக் கும் நற்செய்தி இன்றைய இறைவாக்கின் வழியாக வழங்கப்படுகிறது.

ஆபிரகாம் ஈசாக்கு மோயீசன் என்று பெயர் சொல்லி அழைத்த இறைவன், அன்னை மரியா ளை வானதூதர் வழியாக அருள் நிறைந்தவளே வாழ்க என்று இன்றைய நற்செய்தி வழியாக வாழ்த்தி மகிமைப் படுத்துகின்றார்.

அன்னை மரியா ஆண்டவரு டையத் திட்டத்திற்குக் கீழ்ப் படிந்து, ஆம் என்றும் உம் சொற் படியே ஆகட்டும் என்று தன்னையே கையளித்தது போன்று நாமும் நம்மையே ஆண்டவருக்கு முழுமையாகக் கையளித்து உயர்வு பெறவும், தாழ்ச்சி கீழ்ப்படிதல் வழியாக அருள் வரங்களை பெற்றிடவும் இறையருளை வேண்டி இத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

தனக்கும் தன் மக்களுக்கும் நீதியும் சமாதானமும் அருளிய ஆண்டவருக்குத் தாவீது ஒரு கோயில் கட்ட விரும்புவதைப் பற்றி இன்றைய முதல் வாசகம் பேசுகிறது. இறைவாக்கினர் களுக்கெல்லாம் முன்னோடி யான நாத்தானின் நல்வாக்கை சுமந்துவரும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இன்றைய இரண்டாம் வாசகத்தின் வழியே தூய பவுலடியார் கிறிஸ்தவர்களை இறை நம்பிக்கையில் திடப் படுத்துகிறார். மீட்பின் திட்டத்தைப் பற்றி எடுத்துரைத்து அனை வரும் இயேசுவில் நம்பிக்கை கொண்டு வாழ அழைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) பேரன்பின் பிறப்பிடமான அன்பு இறைவா, உம் திருமகன் இயேசுக்கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்ற உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனை வரும் அன்னை மரியாவின் அர்ப்பணத் தைப் பின்பற்றி, அர்ப்பணிப்புடன் அருட்பணி ஆற்றிட அவர்களுக்குத் தேவையான ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) என்றும் வாழும் எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா, உம் திருமகன் வழங்கிய நற்செய்தியை மனதில் நிறுத்தி, அதை எங்கள் சொல்லிலும் செயலிலும் பிரதிபலித்து இயேசுவின் சாட்சிகளாகச் செயல்படவும், இரக்கமும் கருணையும் எங்களது உள்ளங்களில் ஊற்றாகச் சுரக்கவும், உம் திருவுளத்திற்குப் பணிந்து உமது விருப்பத்தை நிறைவேற்றுவதில் உறுதி உள்ளவர்களாய் வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) அன்பும் கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே இறைவா, பெருமழையினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், முதியோர், ஏழை எளியவர் அனைவருக்கும் உரிய பாதுகாப் பையும், தொற்று நோய்கள் தாக்காத சூழ்நிலையையும் தாரும். அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் எவ்விதத் தடையுமின்றி தாராளமாகக் கிடைத்திடவும், அவர்கள் தங்களது பழைய வாழ்வுக்கு மீண்டு வரவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) எங்களுக்காகப் பரிந்து பேச அன்னை மரியாவை எமக்குத் தந்த அன்பு இறைவா, அன்னை மரியாளின் விசுவாசம், அர்ப்பணம், துணிவு, இறைத்திட்டத்தில் முழு ஈடுபாடு, புனித வாழ்வு போன்ற உன்னதக் குணங்களை எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்நாள் முழுவதும் அன்னையை மரியே வாழ்க என்று வாயார மனதாரப் போற்றிப் புகழ்ந்து வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

உங்கள் கவனம் எதிலோ, அதுவாலே நீங்கள் மாறுவீர்கள்

கேள்வியை சரியாகப் புரிந்தால், பாதி விடை நமக்குக் கிடைத்துவிடும் – சாக்ரடீஸ்

முடியாது என்று நீங்கள் சொல்வதையெல்லாம்
யாரோ ஒருவர் எங்கோ செய்துகொண்டிருக்கிறார். – அப்துல் கலாம்

ஞானம் தத்துவத்தைவிட இசை மிக உயர்ந்த வெளிப்பாடு
– பீத்தோவன்

மிக உயர்ந்தவர்கள், தங்களிடம் கடுமையாக நடந்துகொள்வார்கள்
சின்னத்தனமானவர்கள் மற்றரை கடினமாக நடத்துவார்கள். – கன்ஃபூஷியஸ்

நமக்கான படிப்பினையை கற்றுத் தந்தபின்
துன்பம் நம்மைவிட்டுப்  போய்விடும். – புரூஸ் லீ

மௌனமாக இருக்கக் கற்றுக்கொள்பவர்கள்
மனவலிமையை பெறுவார்கள். – மார்க்கஸ் ஔரேலியஸ்

தன்னை வெல்பவர், உலகையே வெல்வார். – தஸ்தோவஸ்கி

வரம்புமீறிய, சம்பாஷனைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்

துன்பவேளையில்தான் ஒருவரின் ஆளுமை வெளிப்படும். – எபிக்டேடஸ்

நம்புபவர்களிடம் பொய் சொல்லக்கூடாது
பொய் சொல்பவர்களை நம்பக்கூடாது

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

# தேம்பாவணி

## இயேசு, அன்னை மரியா, யோசேப்பு ஆகியோரின் இணைந்த வரலாறு:

யோசேப்புக்கு சூசை, வளன் என்றும் பெயர்கள் உண்டு. தேம்பாவணியின் காப்பியத் தலைவனாக யோசேப்பு இருந்தபோதிலும் அங்கே அன்னை மரியா மற்றும் இயேசுவின் வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளது. மரியாவை மணந்த பின்னரும் திருமண உறவில் யோசேப்பு ஈடுபடவில்லை. மரியா கடவுளின் துணையால் கருத்தாங்கி ஒரு மகவை பெற்றெடுத்து அவருக்கு இயேசு என்று பெயரிடுகிறாா். கன்னியும், தாயுமாகவும் விளங்குகின்ற மரியாவின் பெருமையை வீரமாமுனிவர் தேம்பாவணியில் இவ்வாறு பாடுகிறாா்:

உலகம் மூன்றினும் உவமை நீக்கிய இலயை
மூன்றினும் இழிவு இல் கன்னியாய்,
அலகு இல் மூன்றினுள் நடுவ மைந்தனை
நிலவு மூன்றினும் நிரப்ப இயன்றனள். (பாடல் எண் 946)

பொருள்:

மூன்று உலகங்களிலும் இதற்கு ஓர் ஒப்புமை இல்லாத தன்மையாய், முக்காலங்களிலும் பழுதில்லாதக் கன்னியாய்த் தான் இருந்ததே, அளவில்லாத தெய்வ மூன்றாட்களுள் நடுப்பட்டு நிற்கும் மகனாம் ஆண்டவனை, முச்சுடர்களினும் சிறந்து விளங்க மரியாள் பெற்றெடுத்தாள்.

இலயை மூன்றினும் – என்னும் சொற்றொடர் மரியா மகனைப் பெறு முன்னும், பெற்ற போதும், பெற்ற பின்னுமாக முப்பொழுதும் கன்னியாகவே விளங்கினாா் என்று பொருள்படும்.

வாய்ப் படா நுழை
பளிங்கின் வாய் கதிர்
போய்ப் படா ஒளி படரும்
போன்று, தாய் நோய் படாது,
அருங்கன்னி நூக்கு இலாது
ஆய்ப் படா வயத்து
அமலன் தோன்றினான். (பாடல் எண் 947)

பொருள்:

கண்ணாடி இடத்தில் வாயில் இல்லாமல் நுழையும் பகலவனின் கதிர் உள்ளே போய்க் கெடாத ஒளியைப் பரப்புதல் போன்று எக்குற்றமுமற்ற ஆண்டவன் ஆராய்ச்சிக்கு எட்டாத வல்லமையோடு, தன் தாய் பேறுகால நோவு அடையாமலும் அவளது அறிய கன்னிமைக்கு அழிவில்லாமலும் மகனாய்ப் பிறந்து தோன்றினான் என்று பாடுகிறார் வீரமாமுனிவர்.

தேம்பாவணி நீதி நூலாகவும் விளங்குகிறது. தேம்பாவணி காப்பியம், இயற்கை வனப்பில் இறைவனின் தோற்றம், இல்லறம், துறவறம் ஆகியவற்றின் மாட்சி, உழைப்பின் மேன்மை, வறுமையில் செழுமை, கற்பின் பெருமை, கடவுளின் இலக்கணம், வானோர் உயர்வு, நரகோர் தாழ்வு, பாவத்தின் கொடுமை, அறத்தின் மேன்மை, காதலின் பெருமை, காமத்தின் தீமை ஆகியவற்றை விளக்கும் நீதி நூலாகவும் விளங்குகிறது.

மீண்டும் மலரும்...

இயேசுவுக்கே மகிமை.
கிறிஸ்மஸ் நல்வாழ்த்துகள்.
லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 75

அன்புற் றமர்ந்தவழக்கென்பவையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு



### குறள் விளக்கம்

உலகத்தில் இன்பம் உற்றுவாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்திவாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.

### சிந்தனை

No action without a reaction.. காரணம் இல்லாமல் காரியம் இல்லை என்று சொல்வார்கள். எந்த ஒரு செயலுக்கும் ஒரு பிரதிபலன்; உண்டு என்றும் சொல்லலாம். அதுபோல் இந்த உலகில் அன்புகொண்டு வாழ்கின்றவர்களுக்கு மறுஉலகு கண்டிப்பாக உண்டு என்று குறிப்பிடுகின்றார் வள்ளுவர். இந்த உலகில் அன்போடு வாழ்வதன் பரிசுதான் மறுவுலக வாழ்வின் சிறப்பு.

வேதாகமத்தில் ஆண்டவர் சொல்கின்றார், நீங்கள் ஜெபிக்கின்றபொழுது, தர்மம் செய்கின்றபொழுது இன்னொருவர் காணும்படி செய்யாதீர்கள். மாறாக மறைவாக இருப்பதைக் காணுகின்ற உங்கள் தந்தை உங்களுக்குக் கைமாறு அளிப்பார் என்கிறார். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது. மாறாக மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்றகைம்மாறு அளிப்பார். மத் 6:17,18.

அதுபோல் இந்த உலகுக்கு நீ சிறப்பான அன்பு வாழ்க்கை வாழ்வாய் என்றால் உனக்கு நிச்சயமாக ஓர் இன்பமான சிறப்பான மறுவாழ்வு உண்டு என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அன்புச் செயல்கள் எல்லாம் அழகானவை. நாளுக்கொரு நற்செயல் செய்யப் பழகிவிட்டோம் என்றால் வாழ்க்கை அழகாகிவிடும். அதுவே மறுவுலக வாழ்வுக்கு முன்சுவையாகிவிடும்.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm